# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

### நாடகமும் அரங்கியலும் I

**சுட்டெண் :**........................................ **தரம் : 11** **நேரம் :- 3 மணித்தியாலங்கள்**

**முக்கியம் :**

**1 தொடக்கம் 40** வரையான வினாக்களுக்கு சரியானதும் மிகப்பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.

1. இசை, நடனம், இலக்கியம் போன்ற கலைகள் நாடகத்தில் இணைவதால் அது ஒரு
   1. ஆற்றுகைக் கலை எனப்பெறும். 2. கூட்டுக்கலை எனப்பெறும்.
   3. கட்புல செவிப்புலக் கலை எனப்பெறும். 4. தாக்க மறுதாக்கக் கலை எனப்பெறும்.

2. ஆடும் வீடும், குருவானவர் வீட்டில் போன்ற அரங்க விளையாட்டுக்களினால் முனைப்புறுத்தப் பெறுவது
   1. கருத்துான்றல் ஆகும். 2. உடற் தளர் நிலை ஆகும்.
   3. குரல் வழிச் சித்திரிப்பு ஆகும். 4. கணப்பொழுதில் தீர்மானம் எடுத்தல் ஆகும்.

3. உச்சந்தலையில் இருந்து பிறப்பிக்கப்பெறும் ஒலிகளைச் சுட்டும் பொருத்தமான தொகுதி
   1. ஆடு கத்துதலும், கன்று கதறுதலும் ஆகும்.
   2. புலி உறுமுதலும், விமானமொன்று பறத்தலும் ஆகும்.
   3. மயில் அகவுதலும், யானை பிளிறுதலும் ஆகும்.
   4. பூனை கத்துதலும், குரங்கு கீச்சிடுதலும் ஆகும்.

4. கணபதிப்பிள்ளையின் நாடக எழுத்துருக்களுக்கு ஊடாக வெளிப்படும் பண்பு **அல்லாதது**
   1. தனிமனித விமர்சனம் . 2. சமூக விமர்சனம்.
   3. அரசியல் விமர்சனம். 4. சாதியாசாரம் மீதான விமர்சனம்.

5. புதியதொரு வீடு நாடகத்தை இணைந்து நெறியாள்கை செய்தோரின் தொகுதி
   1. நேமன், ஆனந்தராசா ஆகும். 2. தாசீசியஸ்,வி.எம்.குகராஜா ஆகும்.
   3. சி.மௌனகுரு, தாசீசியஸ் ஆகும் 4. ம.சண்முகலிங்கம், சி.மௌனகுரு ஆகும்

6. பின்வருவனவற்றுள் வ.அ.இராசரத்தினத்தின் சிறுகதையாக அமைவது
   1. மனிதமாடு ஆகும். 2. நாட்டியப் பெண் ஆகும்.
   3. தோணி ஆகும். 4. கதை ஆகும்.

7. பின்வரும் எந்நோக்கம் கருதி ஆரொடு நோகேன் நாடக ஆற்றுகை விமர்சனம் செய்யப்படுகிறது?
   1. படைப்பை மேலும் மேம்படுத்துவதற்காக. 2. படைப்பில் குறை கண்டுபிடிப்பதற்காக.
   3. படைப்பின் சிறப்புக்களைப் புகழ்ந்துரைப்பதற்காக 4. படைப்பாளியுடன் நட்புப் பாராட்டுவதற்காக

8. சி.மௌனகுருவின் நாடகப் பங்களிப்புக்களில் பிரதானமானது

   1. கூத்துக்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றமை ஆகும்.
   2. இளைய தலைமுறையினருக்கு நாடகப் பயிற்சிகளை வழங்கி வருகின்றமை ஆகும்.
   3. கூத்து மரபினை நவீன நாடக மரபின் இன்றியமையா அங்கம் ஆக்கியமை ஆகும்.
   4. நாடக நூல்கள் பலவற்றை வெளியிட்டமை ஆகும்.

9. நெறியாளர் ஒருவர் நடிகர் தெரிவின் போது, மாயன் பாத்திரத்திற்காக நடிகர் ஒருவரைப் பரீட்சித்து, அவரை மாசிலன் பாத்திரத்திற்குத் தெரிவு செய்தால் அத் தெரிவு முறை பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கும்

   1. திறந்த தெரிவு முறை ஆகும்.
   2. சல்லடைத் தெரிவு முறை ஆகும்.
   3. விசேட தெரிவு முறை ஆகும்.
   4. மூடிய தெரிவு முறை ஆகும்.

10. பின்வருவனவற்றுள் காண்பிய விளைவைத் தரும் மூலகம் **அல்லாதது**

   1. இசை ஆகும்.
   2. நடிகன் ஆகும்.
   3. ஒளி ஆகும்.
   4. காட்சி விதானிப்பு ஆகும்.

11. பின்வருவனவற்றுள் புதியதொரு வீடு நாடகத்திற்கான மையக்கருவிற்கு அழுத்தம் கொடுப்பதாக அமையும் பாடல்

   1. கோடை கொடும் பனி மழை குளிரை அஞ்சி என்பதாகும்.
   2. போகாத வழி மீதில் ஆர் போயினார்கள் என்பதாகும்.
   3. சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும் என்பதாகும்.
   4. வெள்ளாப்பிலே எழுந்து வேறு தொழில் பார்க்கவில்லை என்பதாகும்.

12. இசை நாடகம் ஒன்றில் இடம் பெறக்கூடிய ஊட்டு வசனம் பின்வருவனவற்றுள் எது?

   1. ஏனோ எனை எழுப்பலானாய்... என்பதாகும்.
   2. ‘‘ஐயோ’’ வெட்கமாக இருக்கிறது என்பதாகும்.
   3. ‘‘ஆசை உண்டாக தடையோ என்பதாகும்.
   4. கொஞ்சும் கிளி, குருவி, மைனாவே என்பதாகும்.

13. மன்னார் வடபாங்குக் கூத்தில் இடம்பெறும் புலசந்தோர் என்ற பாத்திரத்தின் பிரதான பணியாக அமைந்தது

   1. கூத்தை வழி நடத்துவதாகும்.
   2. பாத்திரங்களை அறிமுகஞ்செய்தல் ஆகும்.
   3. மத்தளம் வாசிப்பதாகும்.
   4. கதைச் சுருக்கத்தை அறிமுகஞ் செய்வதாகும்.

14. நாடகப் பயிற்சியொன்றில் உடலைப் பயன்படுத்தி வெவ்வேறு உருவங்களைக் குழு நிலையில் ஆக்குமாறு கேட்கப்பெறுவதில், முனைப்புறுத்தப்படுவது

   1. போலச் செய்தல் ஆகும்.
   2. ஊமச் சித்திரிப்பு ஆகும்.
   3. வகிபாகச் சித்திரிப்பு ஆகும்.
   4. படைப்பாக்கத்திறன் விருத்தி.

15. பின்வருவனவற்றுள் கூத்துருவ நாடகங்களின் தொகுதியாக அமைவது

   1. இராம நாடகம், அலங்காரரூபன், தர்மபுரத்தின் நாடகம்.
   2. கொல் ஈனும் கொற்றம், ஏகலைவன், அற்றைத் திங்கள்.
   3. நொண்டி நாடகம், வாலிவதை, கர்ணன் போர்.
   4. கோவலன் கூத்து, காத்தவராஜன், காமன் கூத்து.

The National e-Learning Portal for The General Education

16. பின்வருவனவற்றுள் கணபதிப்பிள்ளையின் அரசியல் நாடகங்களின் தொகுதி

1. கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம், சுந்தரம் எங்கே.
2. பொருளோ பொருள் உடையார் மிடுக்கு நாட்டவன் நகர வாழ்க்கை
3. தவறான எண்ணம், துரோகிகள், சங்கிலி
4. மாணிக்கமாலை, சங்கிலி, நாட்டவன் நகர வாழ்க்கை

17. ஷங்கரி :-அம்மையே! அப்பா! உங்கள் அன்பினில் விளைந்த ஆரமுதம் நான் என்பதை மறுக்கவில்லை.

மேற்படி சொல்லாடலின் போது ஷங்கரி படச்சட்ட அரங்கொன்றில் நிற்கப் பொருத்தமான திசை

1. பின் முழு நிலை.
2. முன் முழு நிலை
3. இடது அரை நிலை
4. வலது முக்கால் நிலை

18. இலக்கியம், வானொலி நாடகம் ஆகிய இரு கலை வடிவங்களுக்கு ஊடாக வெளிப்படும் பொதுப்பண்பு

1. இரண்டும் செவிப்புலக் கலை வடிவங்கள் ஆகும்.
2. இரண்டும் கற்றோரினால் மாத்திரம் நயக்கத்தக்கது ஆகும்.
3. இரண்டும் பார்ப்போர் மனவெளியில் காட்சிப் படிமங்களை உருவாக்குபவை ஆகும்.
4. இரண்டும் செலவு கூடிய வடிவங்கள் ஆகும்.

19. பின்வருவோரில் மொழிபெயர்ப்பு நாடகங்களுடன் தொடர்பு **பெறாதவர்**

1. தாசீசியஸ் ஆவார்.
2. நா.சுந்தரலிங்கம் ஆவார்.
3. ம.சண்முகலிங்கம் ஆவார்.
4. பாலேந்திரா ஆவார்.

20. ,,ஆரொடு நோகேன்' நாடகப் பாத்திரமான ராஜ்குமாரின் வேட உடை புலப்படுத்தும் சமூக இயல்பிசைக் குணாம்சம்

1. அவர் கண்டிப்பானவர் என்பதாகும்.
2. அவர் உயர் மத்திய தர வர்க்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துபவர் என்பதாகும்.
3. அவர் ஒரு குடும்பத் தலைவர் என்பதாகும்.
4. குடும்பத்தினருக்கான முடிவுகளைத் தானே எடுப்பவர் என்பதாகும்.

ஜ

21. ஆரொடு நோகேன் நாடகத்தில் வரும் திருமணநாட் காட்சியில் பயன்படுத்தப் பொருத்தமான ஒளி

1. பொட்டொளி ஆகும்.
2. மங்கலாக்கி ஆகும்.
3. பெருக்கொளி ஆகும்.
4. ஒளித்தாரை ஆகும்.

22. பார்ப்போர் நாடகமொன்றைப் பார்க்க வருவதன் முதன்மை நோக்கம்

1. தம் அறிவை மேம்படுத்துவதற்கு ஆகும்.
2. செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஆகும்.
3. பொழுதைப் போக்குவதற்காக ஆகும்.
4. நாடகத்தைப் பார்த்து நயந்து மகிழ்வதற்கு ஆகும்.

23. மயிலி :- கோப்பையைக் கொண்டாவன் கழுவ?

மாசிலன் :- இருக்கட்டும், தண்ணீர் ஒரு சொட்டுத் தா மச்சாள், செம்பிலே கோப்பை கழுவ எனக்குத் தெரியாதே?

மேற்படி சொல்லாடலுக்குரிய காட்சியில் கைப்பொருள்களைப் பயன்படுத்தாது சித்திரிக்கப் பெறுவது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?

1. புதிதளித்தலை ஆகும்.
2. ஊமச் சித்திரிப்பை ஆகும்.
3. போலச் செய்தலை ஆகும்.
4. ஆள்மேற்கொள்ளலை ஆகும்.

24. நாடக எழுத்துருவொன்றில் இடம் பெறும் பின்வரும் மேடைக் குறிப்புக்களில் காட்சி விதானிப்பிற்கான குறிப்பாக அமைவது

1. கோயில் மணியோசை சில கணங்கள் ஒலிக்கிறது.
2. பாடகர் ஒருவர் மீனவனாக நின்று துடுப்பு வலிக்கிறார்.
3. கடற்கரை, புயலின் ஒலிக்குறிப்புக்கள் ஓய்கின்றன.
4. மேடையின் மத்தி இடத்தில் குடிசையொன்றின் முகப்புத் தெரிகிறது.

25. ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரமான ராஜ்குமாருக்குப் பொருத்தமான கைப்பொருள்களின் தொகுதி

1. கைத்தடி, சிகரெட், தீப்பெட்டி.
2. பாடசாலைச் சீருடை, சீப்பு, தும்புத்தடி.
3. புத்தகங்கள், கண்ணாடி, பூச்சாடி.
4. வலை, தூண்டில், வானொலிப் பெட்டி.

26. அம்பிகை :- (அழுகை,ஆத்திரம் அடங்கிய குரலில்) ஓம்!... எனக்கு ஒன்டும் செய்து தரமாட்டினம்!....
நான் என்ன கேட்டாலும் செய்யாயினை!

என்ற சொற்கள் பேசப் பெறும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தக்கூடிய இசை தொடர்பில் பொருத்தமற்றது.

1. பாத்திர உணர்ச்சிக்கு ஏற்ப இசை பிரயோகிக்கப்படும்.
2. சொற்களுக்கு அழுத்தம் தரவேண்டிய இடங்களில் இசை அழுத்தமாக பிரயோகிக்கப்பெறும்.
3. சொல்லாடலுக்கு பின்னணியாக இசை பயன்படுத்ப் பெறும்.
4. சொல்லாடலை மேவும் வகையில் இசை பிரயோகிக்கப்பெறும்.

27. நெறியாளர் ஒருவரது நெறியாள்கைக்கான திட்ட வரைபில் இடம் பெறத் தேவையற்ற ஒரு அம்சம்

1. தேவையான ஒப்பனைப் பொருள்கள் ஆகும்.
2. பாத்திரங்களும் பாத்திரப் பண்புகளும்.
3. நடிகருக்கான பயிற்சிகள் ஆகும்.
4. ஒத்திகைக் காலம் ஆகும்.

28. ,,சைக்கிள் திருத்துநர்' என்ற பாத்திரத்திற்குப் பொருத்தமற்றதாக அமையக்கூடிய பாத்திரப்பண்பு

1. அழுக்கான ஆடைகளை அணிந்திருப்பார்.
2. கறை படிந்த உடலைக் கொண்டிருப்பார்.
3. பெருமளவு ஆங்கிலம் கலந்த சொற்களைப் பேசுவார்.
4. அடிமட்ட வருமானமுடையவராய் இருப்பார்.

29. பின்வருவனவற்றுள் யதார்த்த விரோதக் காட்சி விதானிப்பைச் சுட்டுவது

1. அரங்கின் மேல் மத்தியில் சிலந்தி வலையும் மண்டை ஓடும் வைக்கப்பெற்றிருத்தல்.
2. வரவேற்பு அறையில் சோபா செற்றியும், புத்தக அலுமாரியும் இருத்தல்.
3. மேல் மத்தியில் இரண்டு கதிரைகள், மேசை, நிறை குடம் காணப்பெறுதல்.
4. குடிசையின் முகப்பும், வலையும் காணப்பெறுதல்.

30. வல்லபூதன் தீயை உமிழ்ந்தவாறு முன்னே வருகிறான்**;** மாந்தர் தீப்பட்டது
போல் உடலைக் குறுக்குகின்றனர் **;** முகம் அதிர்ச்சியில் உறைந்து போய்க் கிடக்கிறது**.**
மேற்படி காட்சிப் படிமத்தைச் சித்திரிப்பதற்கு நடிகர் ஒருவருக்கு அவசியமான திறன்

1. உள ஒருமைப்பாடு ஆகும்.
2. உடல், குரல் ஒத்திசைவு ஆகும்.
3. உடற்தளர்ச்சி நிலை ஆகும்.
4. உடல் உள ஒருமைப்பாடு ஆகும்.

31. ‘‘அப்பாவிகளை ஏமாற்றிச் சொத்துச் சேர்த்தவர்’’ என்பதில் சித்திரிக்கப் பெறுவது

1. பாத்திரம் ஆகும்
2. நிகழ்ச்சி ஆகும்.
3. கீழமைவு ஆகும்.
4. அனுபவம் ஆகும்.

32. மையுண்ட நெடுங்கண்ணாத்தைக்குச் செய்யப்பெறும் ஒப்பனை பின்வரும் எதனைப் பூர்த்தி செய்கிறது?

1. நடிகரது முகத்தை அழகாக்குவதை ஆகும்.
2. நடிகரைப் பாத்திரமாகப் பண்பு மாற்றம் செய்வதை ஆகும்.
3. ஒப்பனைப் பொருளின் தரத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதை ஆகும்.
4. ஒப்பனைப் பொருள்களின் சிறப்பைப் புலப்படுத்துவதை ஆகும்.

33. பாண்டவரின் மறுபிறப்புக் கதையுடன் தொடர்புடைய மலையகக் கூத்து


1. பொன்னர் சங்கர் ஆகும். 2. காமன் கூத்து ஆகும்.
3. அர்ச்சுனன் தபசு ஆகும். 4. காடேறிக் கூத்து ஆகும்.

34. வேட்டைத் திருவிழாவின் சிறப்புக்களில் ஒன்றாகக் கருதப் பெறுவது

1. மழை வேண்டி நிகழ்த்தப் பெறுவது ஆகும். 2. நாடகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பது ஆகும்.
3. கதவடித்துப்பாடப் பெறுவது ஆகும். 4. குழந்தை வரம் வேண்டி விரதம் இருப்பது ஆகும்.

35. பின்வருவனவற்றுள் “தொன்று நிகழ்ந்திடு இன்று இலங்கிடு சீர் பெறு யாழ் நகரே” என்ற இசை நாடகப் பாடலுடன் தொடர்புறும் பாத்திரங்கள்

1. பூதத்தம்பி மற்றும் அந்திராசி ஆகும்.
2. பூதத்தம்பி மற்றும் அழகவல்லி ஆகும்.
3. சத்தியவான் மற்றும் சாவித்திரி ஆகும்.
4. அரிச்சந்திரன் மற்றும் சந்திரமதி ஆகும்.




36. அருகிலுள்ள படத்தில் காட்டப் பெற்றுள்ள ஒளியின் பிரதான நோக்கமாக அமைவது

1. மேடைப் பரப்பிற்கு ஒளி பாய்ச்சுவது ஆகும்.
2. காட்சி மாற்றத்தைக் காட்டுவது ஆகும்.
3. மேடையின் குறுகிய பகுதிக்கு அடர்த்தியான ஒளியைப் பாய்ச்சுவது ஆகும்.
4. வர்ண ஒளியை உருவாக்கித் தருவது ஆகும்.



37. அருகேயுள்ள படத்தில் காட்டப் பெற்றுள்ள பாத்திர உணர்ச்சிகள் முறையே

1. கவலை, வியப்பு, வெறுப்பு ஆகும்.
2. கோபம், வியப்பு, கவலை ஆகும்.
3. பயம், கவலை, கோபம் ஆகும்.
4. கவலை, பயம், கோபம் ஆகும்.



38. அருகிலுள்ள படத்தில் காட்டப் பெற்றுள்ள கலைஞர் எவ்வரங்குடன் தொடர்புடையவர்?

1. கூத்தரங்கு ஆகும்.
2. இசை நாடக அரங்கு ஆகும்.
3. சிறுவர் அரங்கு ஆகும்.
4. நவீன நாடக அரங்கு ஆகும்.



39. இங்கே காட்டப் பெற்றுள்ள நிகழ்த்துகைக்கு அடித்தளமாக இருப்பது

1. மகிழ்வளிப்பு ஆகும்.
2. போலச் செய்தல் ஆகும்.
3. செய்தியை வழங்குதல் ஆகும்.
4. நம்பிக்கை ஆகும்.



40. படத்தில் காட்டப் பெற்றுள்ள கூத்தாற்றுகை நடைபெறும் அரங்கவெளி

1. வட்டக்களரி ஆகும்.
2. தீக்குவியற் களம் ஆகும்.
3. காமன் பொட்டல் ஆகும்.
4. கோயில் முன்றல் ஆகும்.

The National e-learning Portal for The General Education

## பகுதி 11

**முக்கியம் :**

**முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** 1 சுருக்கமான விடை எழுதுக.

1. ஒளியின் செறிவைக் கூட்டவும், குறைக்கவும் பயன்படுத்தப்படும் கருவி யாது?
2. இந்திய அரங்கில் பார்ப்போனை ஒத்த நெஞ்சுடையவன் என்ற அர்த்தப்படப் பயன்படுத்தப் பெறும் சொல் யாது?
3. "வருக! எம் குடிகளே" என்ற சொல்லாடல் எம் மோடி சார்ந்ததாகும்?
4. தாடி, மீசை, மச்சம் போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யப்பெறும் ஒப்பனை எம்முறை சார்ந்த ஒப்பனை ஆகும்?
5. தட்டான் வரவுப் பாடல் இடம் பெறுவது எக்கூத்திலாகும்?
6. "வீரம் வீரம் என்று…" என்னும் தருவை இராவணேசனில் பாடும் பாத்திரம் எது?
7. கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியில் நிகழ்த்தப் பெறும் ஆற்றுகை யாது?
8. „என்னடி உந்தன் கோப்பியில்' என்று தொடங்கும் பாடல் எந் நாடகத்தில் இடம் பெறுவதாகும்?
9. ம.சண்முகலிங்கம் அவர்களால் முன்னெடுக்கப் பெற்ற கல்வி அரங்கச் செயற்பாடுகள் இரண்டு தருக?
10. எம்.வி.கிருஷ்ணாழ்வாருக்குப் புகழை ஈட்டித் தந்த பாத்திரங்கள் இரண்டு தருக? ( 02 புள்ளிகள்)

**2.** நாடகம் ஒரு தனிக்கலையாக இருப்பதுடன் கூட்டுக் கலையாகவும் உள்ளது.

1. நாடகத்திற்கேயுரிய தனித்துவமான பண்புகள் யாவை? ( 06 புள்ளிகள்)
2. நாடகமானது
   அ) இசை
   ஆ) இலக்கியம்
   என்பவற்றில் இருந்து எவ்விதம் வேறுபடுகிறது? ( 06 புள்ளிகள்)

**3.**
1. நடிகர் ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்கள் மூன்று தருக? ( 03 புள்ளிகள்)
2. மேற்படி திறன்களை விருத்தி செய்வதற்கு அவசியமான பயிற்சிகள் யாவை? ( 03 புள்ளிகள்)
3. நீர் வகுப்பறையில் செய்து பார்த்த படைப்பாக்கச் செயற்பாடு ஒன்றை விபரிக்குக? ( 06 புள்ளிகள்)

**4.**
1. „சைக்கிள்' என்ற தலைப்பில் குட்டிச் சிறுகதை ஒன்றை எழுதுக? ( 06 புள்ளிகள்)
2. நீர் எழுதிய சிறுகதையைத் தழுவி நாடக எழுத்துரு ஒன்றை ஆக்குக? ( 06 புள்ளிகள்)

**5.**
1. ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம் பெறுகின்ற மூன்றாவது குடும்பத்திற்குரிய பாத்திரங்கள் யாவை? ( 02 புள்ளிகள்)
2. மூன்றாவது குடும்பத் தலைவரதும் முதலாவது குடும்பத் தலைவரதும் உளவியற் குணாம்சங்களை ஒப்பிடுக? ( 05 புள்ளிகள்)
3. மூன்றாவது குடும்பத் தலைவருக்குரிய பாத்திரமாக உம்மைப் பண்பு மாற்றம் செய்ய நீர் எத்தகைய ஆயத்தங்களைச் செய்வீர்? ( 05 புள்ளிகள்)

**6.**
1. கலையரசு பாணி நடிப்பு முறையின் முதன்மையான உள்ளடக்கங்கள் யாவை? ( 06 புள்ளிகள்)
2. கலையரசு பாணியில் இருந்து கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் எவ்வெவ் அம்சங்களில் வேறுபட்டிருந்தன? ( 06 புள்ளிகள்)

**7.** பின்வரும் ஆற்றுகைகளில் நடிப்பு எவ்விதம் வெளிப்பட்டது என்பதைக் கூறுக

1. பாண்டவர் வனவாசம்
2. பறை மேளக்கூத்து
3. இசை நாடகம் ( 03 X 04 = 12 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## க.பொ.த (சா/த) பரீட்சை 2017

## நாடகமும் அரங்கியலும்

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 1- செய்முறை**

1. பின்வரும் புதிதளித்தற் செயற்பாடுகளில் ஒன்றினைத் தெரிவு செய்து சித்திரிக்குக.

    அ) சுழிக்காற்று, பெருமழையுடன் வெள்ளம் வீட்டை நோக்கிப் பெருக்கெடுத்து வருகிறது.

    ஆ) நள்ளிரவில் திடீரெனக் கண் விழித்த போது, வேற்றுக்கிரக உயிரினம் ஒன்று முகத்தருகே நிற்கிறது.

    இ) இன்னும் ஒரு மணி நேரத்தில் உலகம் அழியப் போகிறது. நீர் மாத்திரம் தப்பிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால் உமக்கு முன்னால் சிறு குழந்தையொன்று ஏக்கத்துடன் நிற்கிறது.

**கணிப்பீட்டு நியதிகள்**

- கற்பனை -04 புள்ளிகள்
- படைப்பாக்கம் -04 புள்ளிகள்.
- வெளிப் பயன்பாடு -04 புள்ளிகள்.
- அழகியல் நயம் -04 புள்ளிகள்.
- செயல்களின் பொருத்தப்பாடு -04 புள்ளிகள்.

20புள்ளிகள்

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 2- செய்முறை**

2. கீழே தரப்பெற்றுள்ள படத்தை உன்னிப்பாகப் பாருங்கள். படம் வெளிப்படுத்தும் உணர்ச்சி மற்றும் நிகழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு கதையொன்றினைக் கற்பனை செய்து கூறுங்கள். உமது கதையில் இடம்பெற்ற யாதாயினுமொரு பாத்திரத்தினைச் சித்திரித்துக் காட்டுங்கள். பரீட்சகரால் வினவப்பெறும் கீழ்க்காணும் வினாக்களுக்கு வாய்வழிப் பதில்களை அளியுங்கள்.



The National e-learning Portal for The General Education

1. உம்மால் கூறப்பெற்ற கதையை நீர் நாடகமாக எழுதுவீராயின் அதில் இடம்பெறக்கூடிய நான்கு பாத்திரங்களைக் குறிப்பிடுக.
2. மேற்படி உமது நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு நாடகமொன்றை நீர் நெறியாள்கை செய்வீராயின் அந்நாடகத்தில் இடம்பெறக்கூடிய முதலாவது காட்சி எதுவாக இருக்கும்? இறுதிக் காட்சி எதுவாக இருக்கும்?

**கணிப்பீட்டு நியதிகள்**

- கற்பனை -04புள்ளிகள்
- சித்திரிப்பு நயம் -04புள்ளிகள்
- பாத்திரச் சித்திரிப்பு -04புள்ளிகள்
- வாய்வழி வினா 1 -04புள்ளிகள்
- வாய்வழி வினா 2 -04புள்ளிகள்.

மொத்தம் 20 புள்ளகள்

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 3- கேட்டல்**

3. அ) காமன் கூத்தில் வரும், "நான் அலரிமலர் கணைதொடுப்பனடி" என்ற பாடலை அன்றேல் காத்தவராயன் கூத்தில் இடம்பெற்றுள்ள, "சிங்கமொன்று சின்னான் வருகுது பார்" என்ற பாடலைப் பாடி நடித்துக் காட்டுக.

ஆ) கூத்து, இசை நாடகம் என்பவற்றின் காட்சித் துண்டமொன்றினைக் காணொளியில் பார்க்க. அவ்விரு ஆற்றுகை முறைமைகளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?

இ) பரீட்சார்த்திகளை ஒரே நேரத்தில் தியானச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக. வெவ்வேறு ஊர்களின் பெயர்கள் இடம்பெறும் வகையில் ( குறைந்தது 10) கதையொன்றைக் கூறுக. பின், தனித்தனியாகப் பரீட்சார்த்திகளை அழைத்துப் பின்வரும் வினாக்களை வினவுக.

i. கதையில் இடம்பெற்ற ஊர்களின் பெயர்களைக் கூறுக.
ii. இது எதனை முனைப்புறுத்துவதற்கான பயிற்சி ஆகும்?

ஈ) ஆரொடு நோகேன் நாடகத்தின் மூன்றாவது குடும்பத்தின் தொடக்கக் காட்சியில் வரும் பாத்திரங்களைத் திசை, சமநிலை, மட்டம், பரப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு படச்சட்ட மேடையில் பொருத்தமான இடங்களில் நிறுத்துக.

**கணிப்பீட்டு நியதிகள்**

- வினா 1 - 04 புள்ளிகள்
- வினா 2 - 04 புள்ளிகள்
- வினா 3 (2*2) - 04 புள்ளிகள்
- வினா 4 - 04 புள்ளிகள்
- நடத்தைப் பண்புகள் - 04 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 4- ஆக்கச் செயற்பாடு**

4. அ) புதியதொரு வீடு நாடகத்தில், காட்சி 2 இன் தொடக்கம் முதல், "வாடி பிள்ளை வீட்டுக்கு..." என்பது வரையிலான பகுதியைக் குழுவாகச் சித்திரிக்குக. குறித்த காட்சியில் இடம்பெறுகின்ற ஆடல், பாடல்களும் சித்திரிப்பில் இடம்பெற வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க.

   ஆ) பரீட்சகரால் வினவப்பெறும் வினாக்களுக்கு வாய்வழிப் பதில்களை வழங்குக.
      i. மேற்படி காட்சிக்கு ஒளிவிதானிப்புச் செய்யும் போது எவையெவற்றைக் கவனத்திற் கொள்வீர்?
      ii. இக் காட்சியில் இடம்பெறும் இடி, மின்னல், புயலாக வரும் குழுவிற்கு எவ்வாறான ஆடையை அணிவிப்பீர்?

**கணிப்பீட்டு நியதிகள்**

- பாத்திரச் சித்திரிப்பு - 04 புள்ளிகள்.
- செயலியக்கம் - 04 புள்ளிகள்.
- அசைவியக்க வடிவாக்கம் - 04 புள்ளிகள்
- வினா 1 - 04 புள்ளிகள்
- வினா 2 - 04 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 5- ஆக்கச் செயற்பாடு**

5. பின்வரும் பாத்திரங்களில் ஒன்றுக்கான முகஒப்பனை மாதிரிகையைத் திட்டமிட்டு, A4 தாளில் வரைக. பரீட்சகரால் வினவப்பெறும் வினாக்களுக்கு வாய்வழிப் பதில்களை வழங்குக.

   அ) மையுண்ட நெடுங்கண்ணாத்தை.
   ஆ) மின்னல்.
   இ) ராஜ்குமார்.
   ஈ) மறைக்காடர்.

   i. நீர் தெரிவுசெய்த பாத்திரத்திற்கு இவ்வாறு ஒப்பனைத் திட்டத்தை அமைத்தமைக்கான காரணங்கள் யாவை?
   ii. உமது திட்டமிடலின் பிரகாரம் ஒப்பனை செய்வதற்குத் தேவையான ஒப்பனைப் பொருள்கள் யாவை?

**கணிப்பீட்டு நியதிகள்**

- ஒப்பனைத் திட்டம் - 04 புள்ளிகள்.
- பொருத்தப்பாடு - 04 புள்ளிகள்.
- கற்பனையும் படைப்பாற்றலும் - 04 புள்ளிகள்.
- வினா 1 - 04 புள்ளிகள்.
- வினா 2 - 04 புள்ளிகள்.

மொத்தம் 20 புள்ளிகள்

The National e-learning Portal for The General Education